# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## EP.No.55/2024

dated : 28.10.2025

P.W.1

Name சுரேந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் களப்பணியாளர் மற்றும் பொது அதிகார முகவர். இசைவு தீர்ப்பாயரிடம் நடந்த விசாரணையில் நான்தான் ஆஜராகியிருந்தேன். இசைவு தீர்ப்பாயம் வழங்கிய உத்தரவு ஒருதலைபட்ச உத்தரவு என்றால் சரிதான். இசைவு தீர்ப்பாயத்தில் 27.05.2023 ம் தேதி ரூ.30,20,319/- வழங்க உத்தரவானது. 18.03.2024 அன்று நிறைவேறுதல் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரூ.35,53,088/- என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் பணம் செலுத்திய இரசீதுகள் என்னிடம் காட்டப்படுவதாகும் அவை எ.ம.சா.ஆ.1 முதல் 6 ஆகும். மேற்படி தொகை விவரங்களை நான் தாக்கல் செய்த நிறைவேறுதல் மனுவிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். நிறைவேறுதல் மனு தாக்கல் செய்தபின்னரும் 1ம் எதிர்மனுதாரர் தொகை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை விவரங்களும் நிலுவையில் உள்ள தொகை

எவ்வளவு என்றும் நான் ஒரு கணக்கு பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்படும் முன்பாக செலுத்தப்பட்ட தொகையை கழித்துக் கொள்ளாமல் நான் தாக்கல் செய்துள்ள நிறைவேறுதல் மனு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை கஷ்டநஷ்டப்படுத்த வேண்டுமென்பதற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.28 17:28:20 +0530